முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# மகான் புலிப்பாணிச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

20.05.2019, திங்கட்கிழமை

1. **சித்துபல வென்றிட்ட அரங்கா**
**சித்தர்களை வணங்க வகை செய்து**
**சத்திய நெறி காட்டும் தேசிகா**
**சற்குருவாய் மக்கள் உன்னை ஏற்று வர**
2. வருகவே வையகம் மாறுமென
வாழ்த்தியே நித்ய பிரசன்ன ஆசி
பெருமைபட **விகாரி தகரின் திங்கள்**
**பேதமற சஷ்டிதிகதி சோம வாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 6ம் நாள் 20.05.2019, திங்கட்கிழமை)**
3. **வாரமதில் புலிப்பாணிச்சித்தர் யானும்**
வழங்குவேன் உலகோர் நலம் பெற
சோரம் போகா ஞானயுகமாக்க
சுத்தநெறி காட்டும் அரங்கன்
4. அரங்கன் தருமநெறிகள் தானும்
அகிலத்தில் வளர மலர
வரங்களாக மக்களிடை தானும்
வல்லமைபட மனஉறுதி பெருகி
5. பெருகியே தயை குறைவில்லா
பெருந்தன்மை தியாகசிந்தை வளர்த்து
ஆறுமுக அரங்க ஞானி ஆசிபட
அனைவருக்குள்ளும் இனபேதமிலா
6. பேதமான தீய பொறிபுலனியங்கா
பெருமை தரும் சாத்வீகம் சமத்துவம்
பூதலமெங்கும் அமைதி நிலவும்படி
பிரச்சனை இல்லா சமூகமாக மாறும்
7. மாறுதலை செய்ய வருகின்ற
மகான் அரங்கன் வழிதானும்
ஏறுமுகம் தரும் உண்மை ஞானபூமி
ஏற்றுவர கலிகால சிக்கல் விலகும்
8. விலகுமப்பா இயற்கை வழி பேரிடர்களும்
வினைகளும் அகன்று ஓடுமப்பா
கலகம் வன்கொடுமை இல்லா
கண்ணியமிக்க நல் உலகமாக
9. ஆகுமப்பா அரங்கன் கொள்கை வழி
அகிலமே நன்மை காணுமப்பா
வகைபட உயர் தருமநெறி
வரவேற்று வழிநடக்கும் தேசங்கள்

10. தேசங்கள் எல்லாம் வளரும் உயரும்
தெரியவரும் ஞானவான்கள் தலைமைபட
நேசமான சூழல் உலகமெங்கும்
நிலைத்து கலியுகம் தானும்

11. தானுமே ஞானயுகம் ஆகும்
தரணியை காக்க வந்த அரங்கா
ஞானவான்கள் உன்னால் உலகில்
நன்மைபுரிய உருவாகுவார்கள் அப்பா நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் புலிப்பாணிச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

அநேகம் அநேகம் சித்துகளை வென்று கைவரப்பெற்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலக மக்களெல்லாம் சித்தர்களை வணங்கி ஜென்மத்தைக் கடைத்தேற்றிட வழிவகைகள் செய்து மக்களுக்கு உண்மை ஆன்மீக நெறியாம் சத்தியநெறியினைக் காட்டி ஞான வழி நடத்துகின்ற ஞானதேசிகனே, ஞானசற்குருவே, ஆறுமுக அரங்கமகா தேசிகனே மக்களெல்லாம் உம்மை குருவாய் ஏற்று உம்மை பின்தொடர இந்த உலகமே மாற்றம் அடையும் என்றே வாழ்த்தியே விகாரி வருடம் வைகாசி மாதம் 6ம் நாள் 20.05.2019, திங்கட்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே புலிப்பாணிச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் புலிப்பாணிச்சித்தர்.

வீண் போகாத வகையில் கலியுகத்தினை நல்யுகமாக ஞானயுகமாக ஆக்கிட உலகோர்க்கு தூயநெறியினை அளித்து வழிநடத்துகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகன் காட்டுகின்ற தருமநெறிகள் உலகினில் வளரவளர வளர்ந்து தருமங்கள் பெருக மக்களிடையே மனஉறுதி பெருகிடும். மக்களிடம் தயை சிந்தை பெருகி பெருந்தன்மை அதிகமாகி தியாகசிந்தையும் வளர்ந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசியுடன் அனைவருள்ளும் உள்ள சாதி, மத, இன பேதங்கள் எல்லாம் மறைந்து சாதி, மத, இன, பேதங்கள் இல்லாத சமதர்ம சமத்துவ நிலை உருவாகி தீமையான வழியில் பொறிபுலன்கள் இயங்காமல் பெருமைகளைத் தருகின்ற வகையில் இயங்கி மனதுள் சாத்வீகமும் சமத்துவமும் உருவாகி உலகமெங்கும் அமைதி நிலவும்படி பிரச்சனைகள் ஏதும் இல்லாத நல்ல சமுதாயமாக மாறிடும்.

உலகில் நல்ல மாறுபாடுகளை செய்திட அவதாரமாக வந்துதித்த மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானவழிகள் மக்களுக்கு பலவிதமான முன்னேற்றங்களைத் தருகின்ற உண்மை ஞானவழிகளாகும். உலக மக்களெல்லாம் அரங்கனின் தூயநெறிக் கொள்கைகளை ஏற்று கடைப்பிடித்து கலிகாலத்தின் சிக்கல்கள் எல்லாம் தானே விலகுமப்பா, இயற்கையினால் வருகின்ற பேரிடர்களும் மக்களை அண்டிய வினைகளும் விலகி ஓடுமப்பா.

உலகினில் கலகங்கள் இருக்காது, வன்கொடுமைகள் நடக்காமல் கண்ணியம்மிக்க நல்லுலகமாக மாறிடும். ஆறுமுக அரங்கரின் தூயநெறிக் கொள்கைகளால் உலகமே நன்மைகளை அடைந்திடுமப்பா. முறையோடு அரங்கனின் தானதருமக் கொள்கைளை ஏற்றுக் கொண்டு அதன் வழி நடக்கின்ற தேசங்கள் எல்லாம் நன்மையையே காணுமப்பா. அரங்கனின் தருமநெறியில் நிற்கின்ற தேசங்களெல்லாம் வளமும் நலமும் பெற்று உயர்வடையும். ஞானவான்கள் தலைமையில் உலகமெங்கும் நேசம்மிக்க சூழ்நிலைகள் உருவாகி ஞானம் பெருகி கலியுகமும் ஞானயுகமாக ஆகிடும்.

இவ்வுலகை காத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்த ஆறுமுக அரங்கமகா தேசிகனே உமது கருணையால் உலகினில் ஞானவான்கள் நன்மை புரிந்திட அற்புதமாய் உருவாகி யுகமாற்றம் செய்திடுவார்களப்பா எனக் கூறுகிறார் மகான் புலிப்பாணிச்சித்தர்.

–சுபம்–